www.malankaralibrary.com

# மேற்கு நாடுகளில் கிறிஸ்து பிறப்பு விழா

ஐரோப்பிய கண்டத்திற்குள்ளே உள்ள பல நாடுகளும் கிறிஸ்தவ நாடுகளாகும். மதச்சுதந்திரம் கொண்ட இந்த நாடுகளில் கிறிஸ்தவர்களே அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களது வாழ்வில் கிறிஸ்மஸ் காலம் என்பது அனைவரும் விரும்பி எதிர்பார்த்திருந்து கொண்டாடுகின்ற காலம் ஆகும்.

கிறிஸ்துமஸ் காலங்களில் வீடுகளில் பயன்படுத்தக்கூடிய அலங்காரப் பொருட்கள், வண்ண மின் விளக்குகள், நட்சத்திரங்கள், கிறிஸ்மஸ் குடில்கள் போன்றவை கிறிஸ்துமஸ் சந்தையில் விதவிதமாக விற்பனைக்கு வருகின்றன. கையினால் செய்யப்பட்ட கைவினைப் பொருட்களைத் தான் மக்கள் விரும்பி வாங்குகின்றனர். இவை தரம் உயர்ந்தவையும், நீண்ட நாட்கள் பயன்படுத்த முடிந்தவையும் ஆகும். ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் இச்சந்தைகளை முன்னின்று நடத்துகின்றன. மக்களும் இதனை பார்வையிடவும் பொருட்கள் வாங்கி மகிழவும் செய்கின்றனர். அரசும் தெருக்களை வண்ண விளக்குகளால் அலங்காரம் செய்கின்றது.

கிறிஸ்துமஸ் என்றாலே கிறிஸ்துமஸ் மரம் முக்கியமான ஒன்றாகும். வீட்டிற்குள் கிறிஸ்துமஸ் மரத்தை தொட்டியில் நட்டு அதனை விளக்குகளாலும் அலங்காரப் பொருட்களினாலும் அழகுபடுத்துகின்றனர். ஒவ்வொரு நாளும் பல்வேறு அலங்காரங்களை சேர்த்துக் கொள்கின்றனர். கிறிஸ்துமசுக்கு முந்தைய நாள் குழந்தைகளுக்கான பரிசுகளை இதனில் தொங்க விட்டு குழந்தைகளைக் கொண்டே அதனை பறித்துக் கொள்ள விடுகின்றனர். இதற்கான குட்டி கிறிஸ்துமஸ் மரங்கள் சந்தைகளில் விற்பனைக்கு வருகின்றன. பிளாஸ்டிக் போன்ற செயற்கை மரங்களையும் பயன்படுத்துகின்றனர்.

இலத்தீன் திருவழிபாட்டு முறையில் கிறிஸ்து பிறப்பு திருநாளுக்கு முந்தைய நான்கு ஞாயிற்றுக்கிழமைகள் அடங்கிய நான்கு வாரங்கள் திருவருகைக் காலம் என கொண்டாடப்படுகிறது. திருவருகைக்கால வளையம் என்பது ஐரோப்பிய நாடுகளில் திருவருகைக் காலத்தில் இயேசு கிறிஸ்துவை வரவேற்க நான்கு மெழுகுவர்த்திகள் எரிய வைக்கப்படும் தயாரிப்பு நிகழ்வு ஆகும்.

திருவருகைக்கால வளையம் ஆனது பச்சை நிற இலைச் செடிகளால் அலங்கரிக்கப்படுகிறது. மூன்று ஊதா நிற மெழுகுவர்த்திகளும் ஒரு றோஸ் நிற மெழுகுவர்த்தியும் பயன்படுத்தப்படுகின்றன. திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையில் திருவருகைக்கால வளையம் ஆசீர்வதிக்கப்பட்ட நீரால் மந்திரிக்கப்படுகிறது. தொடர்ந்து குடும்பத்தில் உள்ள குழந்தைகள் உட்பட அனைவரும் இணைந்து திருவருகைக்கால மன்றாட்டை செபிப்பார்கள். குடும்பத்திலுள்ள மூத்தவர் அல்லது இளையவர் முதல் மெழுகுவர்த்தியை எரிய வைக்கின்றார்.

மெழுகுவர்த்திகள் எரிய வைக்கும் போது பாடல் பாடப்படுகிறது. இந்தப் பாடல் நான்கு பகுதிகளைக் கொண்டது. முதல் மெழுகுவர்த்தி ஏரிய வைக்கப்படுகின்ற போது இப்பாடலின் முதல் பகுதியானது பாடப்படுகிறது. இரண்டாம் ஞாயிறன்று இரண்டாவது மெழுகுவர்த்தி உள்பட இரண்டு மெழுகுவர்த்திகள் எரிய வைக்கப்படுகின்ற போது பாடலின் முதல் இரண்டு பகுதிகள் பாடப்படுகின்றன. மூன்றாம் ஞாயிறன்று மூன்றாவது மெழுகுவர்த்தி உட்பட மூன்று மெழுகுவர்த்திகள் எரிய வைக்கப்படுகின்ற போது பாடலின் முதல் மூன்று பகுதிகள் பாடப்படுகின்றன. அவ்வாறே நான்காவது ஞாயிறன்று றோஸ்

www.malankaralibrary.com

நிற மெழுகுவர்த்தியோடு நான்கு மெழுகுவர்த்திகள் எரிய வைக்கின்ற போது பாடலின் நான்கு பகுதிகளும் அனைவராலும் இணைந்து பாடப்படுகின்றது. நான்காவது மெழுகுவர்த்தியை எரிய வைத்த பின்னர் பெற்றோர் பிள்ளைகளிடம் கிறிஸ்து பிறப்புத் திருநாள் நெருங்கி வருகிறது எனக் கூறுவர்.

முதலாவது மெழுகுவர்த்தி நம்பிக்கையை குறிக்கிறது. இரண்டாவது மெழுகுவர்த்தி அன்பைக் குறிக்கிறது. மூன்றாவது மெழுகுவர்த்தி மகிழ்வைக் குறிக்கிறது. நான்காவது மெழுகுவர்த்தி சமாதானத்தை குறிக்கிறது. கிறிஸ்துமஸ் திருநாளுக்கு முந்தைய நாள் மாலையில் திருவருகைக்கால வளையத்திலுள்ள இலைகளும் மாற்றப்பட்டு புதிய இலைகளால் அலங்கரிக்கப்படும். நான்கு மெழுகுவர்த்திகளும் மாற்றப்பட்டு புதிய வெள்ளை நிற மெழுகுவர்த்தி வளையத்தின் நடுவே எரிய வைக்கப்படும். எரிந்து ஒளி வீசும் வெள்ளை நிற மெழுகுவர்த்தி கிறிஸ்துவின் வருகையை குறிப்பிடுகின்றது. இத்தகைய வளையமானது வீடுகள், ஆலயங்கள், மற்றும் பொதுவிடங்களிலும் அமைக்கப்படும்.

கிறிஸ்து பிறப்புத் திருநாளுக்கு முன்னைய 24 நாட்களையும் இணைத்து திருவருகைக் கால நாள்காட்டி தயாரிக்கப்படுகின்றன. சாதாரண சந்தைகளில் இந்த நாள்காட்டிகள் மலிவான விலையில் விற்பனைக்கு வருகிறது. இந்த நாள்காட்டியில் 24 சிற்றறைகள் காணப்படும். ஒவ்வொரு நாளும் அதன் வாசல்களை குழந்தைகள் திறந்து பார்க்கும் போது ஒவ்வொரு நாளும் வித்தியாசமான இனிப்பு பண்டங்கள் உள்ளே இருப்பதை குழந்தைகள் விரும்பி உண்கின்றனர். திருவருகைக் காலத்தில் குழந்தைகளுக்கு பிடித்தமான ஒன்றே திருவருகைக்கால நாள்காட்டி.

கிறிஸ்துமஸ் குடிலை நம் ஊரைப் போன்று வீதிகளில் அமைக்க மாட்டார்கள். அவரவர் வீடுகளில் இட வசதிக்கேற்ப சிறிதாகவோ பெரிதாகவோ அமைத்துக் கொள்வர். கிறிஸ்துமஸ் தினத்தின் முந்தைய நாளன்று மாலையில் தான் குழந்தை இயேசுவின் உருவத்தை குடிலில் வைப்பார்கள்.

ஆலயங்களில் மிகப்பெரிய அளவில் கிறிஸ்துமஸ் குடில் வடிவமைக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆலயமும் வரலாற்று சிறப்பு வாய்ந்த கிறிஸ்துமஸ் குடில் உருவங்களையும் பயன்படுத்துகின்றனர். முக்கியமாக அந்த பங்கை சார்ந்த நபர்கள் மரத்தால் செய்த உருவங்கள் மற்றும் அவர்களே செய்த அலங்கார உடைகளை அணிவித்து ஆண்டுதோறும் பயன்படுத்துவதை பெருமையாக கருதுகின்றனர். குறிப்பாக நான் பணிபுரியும் ஆலயத்தில் பயன்படுத்தக்கூடிய கிறிஸ்துமஸ் குடிலின் உருவங்கள் ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கும் பழமையானவை ஆகும். தங்கள் சாதாரண வாழ்க்கை நிலையோடு குறிப்பாக அவர்களது வாழ்க்கையில் முக்கியமான நபர்களின் வடிவத்தையும் செதுக்கி அவற்றை குடிலில் வைத்து பயன்படுத்தி வருகின்றனர்.

இவர்களது திருவழிபாட்டு நிகழ்வுகள் தான் கிறிஸ்துமஸ் திருநாளுக்கு முக்கியத்துவத்தை அதிகரிக்கின்றன. 24ஆம் நாள் மதியம் 12 மணிக்கு அனைத்து கடைகளும் நிறுவனங்களும் மூடப்படுகின்றன. சாலைகளில் வாகனங்கள் இல்லை. தெருக்கள் அமைதியாக இருக்கும். அன்றைய மாலையில் அனைவரும் குடும்பத்தினரோடு ஒன்றிணைந்து குழுவாக அமர்ந்து பேசி உறவை பகிர்ந்திடும் தினமாக கொண்டாடப்படுகிறது.

ஆலயத்தின் திருவழிபாட்டு நிகழ்வுகள் நான்கு நேரங்களாக நடத்தப்படுகின்றன. முதலாவதாக குழந்தைகளுக்கான சிறப்பு கிறிஸ்துமஸ்

www.malankaralibrary.com

நிகழ்ச்சிகள் மாலையில் சூரியன் மறைவதற்குள் குழந்தைகள் ஆர்வத்தோடு பங்கேற்கும் விதமாக நடத்தப்படுகின்றன. இரண்டாவதாக மாலை நேரத்தை தூய மாலை என பெயரிட்டு நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துகின்றார்கள். மாலை 6 மணிக்கு நடைபெறும் திருப்பலியில் குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக இணைந்து பங்கேற்கின்றனர். மூன்றாவதாக இரவு 10 மணி அளவில் இரவு நேரத் திருச்சடங்குகளும் ஆடம்பரத் திருப்பலியும் நடைபெறுகின்றன. முதியவர்கள் ஆர்வத்தோடு இத்திருப்பலியில் பங்கேற்கின்றனர். நான்காவதாக கிறிஸ்துமஸ் தினத்தன்று காலையில் ஒவ்வொரு ஆலயத்திலும் இரண்டு முதல் மூன்று திருப்பலிகள் விசுவாசிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

முந்தைய நாளின் மாலை நேரத்தில் தான் குடும்பங்களில் கிறிஸ்துமஸ் தின நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. மாலை நேரத்தில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து சிறப்பு உணவினை சமைத்து மகிழ்வுடன் உண்கின்றனர். உணவு உண்ட பின்னர் அனைவரும் ஒன்றாக வீட்டின் முன் அறையில் அமைக்கப்பட்டிருக்கும் கிறிஸ்துமஸ் குடில் மற்றும் கிறிஸ்துமஸ் மரத்துக்கு முன்னால் வந்தமர்வர். குடும்பத்தின் மிகவும் இளைய உறுப்பினர் குழந்தை இயேசுவின் உருவத்தை கிறிஸ்துமஸ் குடிலில் கொண்டு வந்து வைப்பார். பின்னர் வெள்ளை நிற மெழுகுவர்த்தி எரிய வைக்கப்படும். தொடர்ந்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கிறிஸ்துமஸ் பாடல்களை ஒன்றாக இணைந்து பாடி மகிழ்கின்றனர். கடைசியில் அமைதியான நல்லிரவு அதாவது சைலன்ட் நைட் என்ற பாடலை பாடுகின்றனர். பின்னர் சிறியவர் முதல் பெரியவர் வரை தாங்கள் தயாரித்து வைத்திருக்கும் பரிசுப்பொருட்கள் கிறிஸ்துமஸ் மரத்தில் தொங்க விட்டிருப்பதை இளையவர் முதல் முதியவர் வரை வரிசையாக பறித்தெடுத்து அனைவரையும் காண்பித்து மகிழ்வர். அடுத்த நாள் காலையிலும் மதியமும் மாலையிலும் அனைவரும் ஒன்றாக இணைந்து தொடர்ந்து கிறிஸ்துமஸ் தின விழாவை குடும்பங்களிலேயே அமர்ந்து கொண்டாடுவார்கள்.

கொரோனா காலத்து கிறிஸ்துமஸ் தின விழாவின் போது குடும்ப உறவுகளின் சங்கமம் எனப்படும் அனைவரும் ஒன்றிணைந்து விருந்துண்டு மகிழும் நிகழ்வு தடை செய்யப்பட்டதாக இருந்தது. எனவே முதியவர்கள் பெரும் வருத்தத்திற்கு உள்ளாகினர். ஆனாலும் அவரது பிள்ளைகள் ஓரிரு நபராக கிறிஸ்துமஸ் தினத்திற்கு பின்னர் வந்து தங்களுடைய பரிசுகளை சமர்ப்பித்து உறவை மேம்படுத்த முயன்றனர்.

கிறிஸ்துமஸுக்கு முந்தைய நாட்களில் காணப்படும் பரபரப்பான நகரங்களின் சூழ்நிலை இவ்வாண்டு முற்றிலுமாக இல்லாமலிருந்தது. கடைகள் திறக்கப்படாததால் நகரம் மக்கள் இன்றி வெறிச்சோடி கிடந்தது.

ஆலயங்கள் திருவழிபாட்டு நிகழ்வுகள் இல்லாமல் மூடிக்கிடந்தன. ஆனால் எந்நேரத்திலும் ஆலயத்தில் வந்து கிறிஸ்துமஸ் குடில் பார்ப்பதற்கும் திருசன்னதியில் அமர்ந்து ஜெபிப்பதற்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. குழந்தைகள் உள்ள குடும்பங்களில் வீடுகளிலேயே ஜெபக்கூட்டங்கள் நடத்துவதற்கான மாதிரி படிவங்கள் பங்குகளில் பிரசுரிக்கப்பட்டன. இணையதளத்தில் திருப்பலிகளும் மறையுரைகளும் மற்று முக்கிய நிகழ்வுகளும்

www.malankaralibrary.com

ஒளிபரப்பப்பட்டன. இவ்வாறு ஆலயத்திற்கு வரமுடியவில்லை என்றாலும் கிறிஸ்து பிறப்புத் திருநாளின் ஆன்மீக மகிழ்வை முடிந்த அளவுக்கு ஒவ்வொருவரும் தங்களுடைய குடும்பங்களில் உணர்ந்து கொள்ள முடிந்தது

மேற்கு நாடுகளில் கிறிஸ்து பிறப்புத் திருநாள் மிகவும் முக்கியமான திருநாளாக குடும்பங்களில் கொண்டாடப்படுகிறது. மகிழ்வை குறிக்கோளாக, உறவின் சங்கமமாக, ஒன்றிப்பின் அடையாளமாக இத்திருநாள் கொண்டாடப்படுகிறது. நம் கலாச்சாரத்தில் கிறிஸ்து பிறப்புத் திருநாளை வேறு விதத்தில் நாம் கொண்டாடுகின்றோம். என்றாலும் இத்தகைய மேற்குறிப்பிட்ட ஒரு சில நிகழ்வுகளை நம் குடும்பங்களிலும் புகுத்தி குடும்ப உறவை மேன்மை அடையச் செய்து கிறிஸ்து பிறப்பு விழாவை நன்முறையில் கொண்டாட நாம் ஒவ்வொருவரும் முயல்வோம்.

Fr. Maria John